6th August 1965]

சீக்கிரத்தில் எல்லா பஞ்சாயத்து யூனியன்களும் டிராக்டர் வாங்கி விவசாய உற்பத்தியில் ஈடுபட ஊக்கம் கொடுக்க முயற்சி செய்து கொண்டிருப்பதாகத்தான் முதலில் குறிப்பிட்டேன்.

திரு. ம. கமலநாதன் : சார், இந்த பஞ்சாயத்து யூனியன்கள் 1961-ல் ஆரம்பிக்கப்பட்டன. அப்படி ஆரம்பிக்கப்பட்ட திலிருந்து டிராக்டர் தேவை என்று விண்ணப்பம் வந்துகொண் டிருக்கும் என்று நினைக்கிறேன். மேலும், கனம் உறுப்பினர் கேட்டது போல சென்ற ஆண்டு மட்டுமல்ல, பல ஆண்டுகளாக பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பரிசிலனை எப்போது முடியும் . . .

MR. SPEAKER : The Hon. Member is putting the same question again.

திரு. ம. கமலநாதன் : இதிலே இம்ப்ளிமெண்ட்ஸ் கொடுக் கிறோம். டஸ்டர்ஸ், ஸ்ப்ரேயர்ஸ் எல்லாம் 4,000-5,000 ரூபாய் விலையில் கொடுத்தது உபயோகப்படாமல் இருக்கிறது. அந்தத் தொகையை வேறு வகையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று உத்திரவு போட்டாலும் போதும். ரஷ்யன் டிராக்டரை 7,000 அல்லது 8,000 ரூபாய் செலவில் வாங்கிக்கொள்ளலாம். அந்த மாதிரி உத்தரவு கொடுக்க ஏதேனும் சங்கடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கெனவே கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியைத்தான் திருப்பிக் கேட்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு எத்தனை பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து இம்மாதிரி கோரிக்கைகள் வந்தன ? அதிலே எத்தனை மனுக்களை பரிசிலனை செய்து முடித்து அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். 9-00 a.m.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எருமப்பட்டி , சேலம் டிஸ்டி ரிக்ட் ; நெல்லிக்குப்பம், ஸவுத் ஆர்காட் டிஸ்டிரிக்ட் ; கொள்ளடம், ஆணைக்காரச் சத்திரம், தஞ்சை ஜில்லாவில். முடைக்குறிச்சியில் தான் தாங்கள் பணம் போட்டு வாங்கிக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். மற்ற பஞ்சாயத்து யூனியன்கள் ஹயர் பர்சேஸ் ஸ்கீமில்தான் கேட்கிறார்கள். இப்பொழுது சில இடங்களுக்கு பரீட்சார்த்தமாக சாங்ஷன் செய்து, அது எப்படி வேலை செய்கிறது என்று பார்த்து, பின்புதான் இதுபற்றி உத்தரவு போடவேண்டும். மாநில முழுவதும் எத்தனை பஞ்சாயத்து யூனியன்கள் அப்ளை செய்தன என்ற தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

புதுக்கோட்டை நகராட்சிக்கு நில ஆர்ஜிதம் செய்தல்

* 100 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வள்ளுவர் நகர், காந்தி நகர், உசிலங்குளம், அடப்பன்குளம், காமராஜர் நகர்,

ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்பு இடங்களை assignment செய்து கொடுப்பது பற்றி நகராட்சியிலிருந்து கோரிக்கைகள் வந்தனவா ?

(இ) அதன் மேல் எடுக்கப்பட்ட முடிவு யாது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. முருகையன் : கலெக்டரிடம் சென்று இது சம்பந்தமாக கேட்டபொழுது, தாங்கள் மேலே சர்க்காருக்கு தகவல் அனுப்பியிருக்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். அங்கு இருக்கிற மக்களுக்கு எந்த நேரத்திலும் காலி செய்ய வேண்டும் என்று நகராட்சியிலிருந்து நோட்டீஸ் பிறப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனை மீண்டும் பரிசீலனை செய்தாவது கலெக்டரிடமிருந்தாவது வேண்டிய தகவல் தெரிந்து, அங்கு வாழ்கின்ற மக்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலையிலிருந்து ஏதாவது பரிகாரம் தேடுவதற்கு சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மூலக் கேள்விக்கு பதில் சொல்லும் பொழுது, இந்த விதமான பிரச்னையை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை என்று குறிப்பிட்டேன். கமிஷனரிடம் விவரம் கேட்டதற்கு, சம்பந்தப்பட்ட டி.ஆர்.ஓ. மூலம் விவரம் எழுதி அனுப்பியிருப்பதாகவும், அது நல்ல முறையில் பரிசீலனையில் இருந்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த நிலத்தை குடியிருப்புக்காக அடமானம் செய்யவேண்டும் என்று முனிசிபாலிடி தீர்மானம் போட்டு, 'லே அவுட்' போட்டு அதை சிபார்சு செய்து, டைரக்டர் ஆப் டவுன் பிளானிங் அந்த 'லே அவுட்டை' அங்கீகாரம் செய்து, அஸைன்மெண்டு ஆகவேண்டிய தருணத்தில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் எப்படி இல்லை என்று சொன்னார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கனம் அமைச்சர் திரு. ராமையா அவர்களுக்கு ஞாபகம் இருக்கும், முனிசிபல் தேர்தலுக்கு முன்பு 'நான் இருக்கிறேன், அடமானம் பெறுவதற்கு' என்று சொல்லித்தான வோட்டு பெற்றார்கள். ஆகவே, துரிதமாக இந்த நிலத்தை அஸைன் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கோரிக்கை சர்க்காருக்கு வந்ததா என்ற கேள்விக்கு வரவில்லை என்று பதில் சொன்னேன். இந்தப் பிரச்னை நெடு நாளைய பிரச்சனையாக இருக்கலாம். இம்மாதிரி கேள்வி வந்தவுடன் கமிஷனரை விவரம் கேட்டதற்கு சம்பந்தப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளுக்கு அனுப்பியிருப்பதாக தகவல் கிடைத்தது. காமராஜ் நகர் குடியிருப்பு சம்பந்தமாக டைரக்டர் ஆப் டவுன் பிளானிங்குக்கு 'லே அவுட்' அப்ரூவலுக்கு எழுதியிருப்பதாகவும், அவைகளையெல்லாம் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கமிஷனர் பதில் தந்திருக்கிறார்கள்.

திரு. பி. முருகையன் : அங்கிருக்கிற நகராட்சித் தலைவர் அவர்கள் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிற மகஜர் ஒன்றை என்னிடம்

6th August 1965]

கொடுத்திருக்கிறார்கள். அது சர்க்காருக்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்குள்ள காரணங்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வந்து சேரவில்லை என்றால், வரவில்லை என்று தான் சொல்ல முடியும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO SUDDEN REDUCTION OF FINANCIAL ASSISTANCE BY CO-OPERATIVES.

SRI M. S. SELVARAJAN : I wish to call the attention of the Hon. Minister for Co-operation to a matter of urgent public importance, namely, sudden reduction of financial assistance by Co-operatives to the agriculturists, weavers and other weaker sections of the community and thereby arresting the growth of production and affecting the economic welfare of the poor at large.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The agriculturists are provided cultivation credit through the agricultural credit societies with reference to the cost of cultivation for the different crops. The volume of credit (loans) thus provided has been steadily on the increase year after year as shown below :—

	RUPEES IN CRORES.
1961–62	30·51
1962–63	36·92
1963–64	42·94
1964–65	44·07

The land mortgage banks provide long-term credit payable in 10 to 20 years for the purpose of development of lands and discharge of prior debts. While these banks issued Rs. 3.27 crores during the year 1963–64, the amount issued during the year 1964–65 was Rs. 3.51 crores.

Thus, there has been increase in the provision of credit to the agriculturists by the Co-operatives for the previous year.

Assistance to Weavers Co-operatives.—There has been no reduction in the financial assistance given by the Weavers Co-operatives to the members for production purposes. In the beginning of the Third Five-Year Plan, (i.e.) 1961–62, the total credit limit enjoyed by the Weavers Co-operatives amounted to Rs. 229 lakhs while it was increased to Rs. 391 lakhs in 1964–65. Even taking Five-Year Plan provision, the quantum of provision of the Second Five-Year Plan was Rs. 712·42 lakhs, while in the Third Plan, provision is Rs. 747 lakhs. For the Fourth Plan a provision of Rs. 11.35 crores has been proposed. Provision for assistance given by Government